Sri V. K. KOTHANDARAMAN : நமது சர்க்காரின் பாதுகாப்புடன் நடக்கும் ஒரு அன்னிய சர்க்கார், அதிக லாபம் சம்பாதிக்கும் ஒரு சர்க்கார், அங்கே வேலை செய்யும் தொழிலாளிகளுக்குச் சரியான சம்பளம் கொடுக்க வில்லை என்ற காரணத்தினால், ஒரு கோரிக்கைப் பட்டியல் சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ? அதற்காக வேண்டி சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? அப்படி அன்னிய சர்க்காருக்கு நமது சர்க்கார் எதற்காகப் பாதுகாப்புக் கொடுக்கிறது ?

Mr. SPEAKER : இந்தக் கேள்வி பொதுவானதாக இருப்பதாலும் இந்தக் கேள்விக்கும் முதல் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்ப தாலும், இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை. **I disallow this question.** இப்போது 59–வது கேள்வியையும் 60-வது கேள்வியையும் ஒன்ருக எடுத்துக் கொள்ளலாம்.

Gypsum

* 59 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the places where Gypsum is available and the place where it is extracted at present ; and

(*b*) the basis on which licences for extraction of Gypsum are granted ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The most important deposit of gypsum in this State is found in the Cretaceous rocks of Tiruchirappalli district. Gypsum also occurs in the form of Crystalline scales mixed with and coating kankar in the black cotton soil tract of the northern part (Kovilpatti and Ettayapuram) of Tirunelveli district and in some black soil areas in Coimbatore district. Crystalline places of gypsum occurs in the estaurine silts near Ennore and other places of north Madras, but the distribution is very sparse. Occurrence of gypsum has also been reported from Ramanathapuram district. Gypsum is extracted in an extensive scale in Tiruchirappalli district. In the districts of Coimbatore, Tirunelveli and Ramanathapuram, it is extracted on a small scale.

(*b*) Gypsum is one of the minerals included in Schedule IV to the Mineral Concession Rules, and the prior approval of the Government of India is necessary for the grant of mineral concessions in respect of this mineral. It also comes within the scope of Schedule 'A' to the revised Industrial Policy Resolution of the Government of India and hence its future development is the exclusive responsibility of the State. Mineral concessions are therefore granted by the State Government, after getting prior approval of the Government of India, only in respect of the areas which in the opinion of this Government cannot be economically worked as a State enterprise, but can be worked with advantage as a small scale mine.

Gypsum

* 60 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) when the survey regarding Gypsum deposits in the Tiruchirappalli district was completed;

Starred Question 60-A—Taken along with Starred question 53.

(*b*) the results of the survey; and

(*c*) the steps taken by the Government for the full exploitation of gypsum?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) In the year 1940, the Department of Geological Survey of India conducted a survey of the gypsum deposits in Tiruchirappalli district. The following are the main findings of that survey :—

(1) the most important gypsum deposits occurred in the crateceous rocks of the district, as veins traversing clays and slits over an area of about 22 square miles between Chittalai in the north and Tappay and Periakurukkai in the south;

(2) the mineral formed 0·75 to 1 per cent of the volume of the strata, and was noticed to occur up to a depth of 30 feet; and

(3) the mineral was expected to continue to 50 feet depth, and the total quantity estimated to be present in the area was of the order of 15,300,000 tons within a depth of fifty feet from the surface.

(*c*) The State Government have recommended to the Government of India that gypsum in the Tiruchirappalli district be reserved for exploitation by the State. Much of the gypsum bearing areas are now held on lease by private parties and the mineral is used in the manufacture of cement and ceramics. There was a proposal to utilise the gypsum deposits, as a part of the integrated Lignite Project, for the production of fertilizers in the form of double salt. But it has since been decided to manufacture only urea of the order of 70,000 tons of Nitrogen per annum by the total recycle process at Neyveli and no gypsum will be required for this. The question of utilising these deposits suitably has to be examined.

SRI M. KALYANASUNDARAM : திருச்சியில் இருக்கும் ஜிப்சத்தை சர்க்காரே எடுத்து உபயோகப்படுத்தவேண்டும் என்பது ஆலோசனையில் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்காரே எடுத்து தொழில் நடத்த வேண்டிய 12 கனிப் பொருள்களில் ஜிப்சமும் ஒன்று ஆகும். அப்படியிருக்கும்போது சேலத்தில் இது என் தனியாருக்குக் கொடுக்கப்பட்டது.

THE HON. SRI R. VENKATARAMAN : முதலில் திருச்சியில் உள்ள ஜிப்சத்தை நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் வைக்கப்போகிற பெரிய தொழிற்சாலைக்கு உபயோகப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது நாம் அங்கே உற்பத்தி செய்யப்போவது யூரியாவானதால் ஜிப்சம் அங்கே தேவையில்லை என்று கருதப்படுகிறது.

SRI S. LAZAR : ஜிப்சத்தை எடுப்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆனால், ஜிப்சத்தை கொண்டு வருவதற்கான பாதைகளை இவர்கள் பாழ்படுத்தி விடுகிறார்கள் என்பதை சர்க்கார் அறிவார்களா? ஆகவே, நல்ல ரஸ்தாக்களை அமைக்க வேண்டும் என்பதும் லீஸிற்கு விடும்போதே ஒரு நிபந்தனையாகப் போடப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த யோசனை கவனிக்கப் படும்.

1st November 1957]

Sri M. KALYANASUNDARAM : தனியாருக்கு விடப்பட்டிருப் பதனால் ஒரு ஆபத்தும் இருக்கிறது. அவர்களுக்குச் சில கட்டுப்பாடு இல்லை. சர்க்காரே எடுத்துக்கொள்ளும் நிலைமை இருப்பதனால், ஜிப்ஸம் இருக்கக் கூடிய பிரதேசத்திலும் சரி, அல்லது இதற்கு முன் குறிப்பிட்ட சேலம் மாக்னசைட் பிரதேசத்திலும் சரி, எங்கு வேண்டுமானாலும் வெட்டி மேலெழுந்தவாரியாக சேதமடையும்படி செய்து எடுத்து விட்டுப் போகிறார்கள். இவைகளைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? 9-50 a.m.

The Hon. Sri R. VENKATARAMAN : "லீஸ்" வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் நியாயமான முறையில் கனிப் பொருளை வெட்டி எடுக்க உரிமை இருக்கிறது. தவறு செய்கிறார்கள் என்று தனியாகக் குற்றம் சாட்டப்பட்டால் அதை சர்க்கார் பரிசீலனை செய்யும்.

Sri A. VEDARATNAM PILLAI : மத்திய அரசாங்க கைத்தொழில் ஆராய்ச்சி நிபுணர்கள், வேதாரணியம் "great ஸ்வாம்ப்பில்" மூன்று கோடி ரூபாய் செலவு செய்தால் வருஷத்திற்கு 3 கோடி ரூபாய்க்கு ஜிப்ஸமும், இதர உப்புப் பொருள்களும் எடுக்க முடியும் என்று ஆராய்ச்சி செய்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைக் காரிய சாத்தியமாக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த விவரத்தை கனம் அங்கத்தினர் அவர்களே கொடுத்திருக்கிறார். இப்போது நமக்குத் தரையை வெட்டாமலே கிடைக்கக்கூடிய பொருளாக ஜிப்ஸம் இருக்கிறது. மூன்று கோடி ரூபாய் செலவழித்து ஜிப்ஸம் எடுக்கவேண்டுமென்று சொன்னால் அதை ஆராய்ந்து பரிசீலனை செய்யவேண்டும்.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : கனம் சபாநாயகர் அவர்களே, சிவகங்கைப் பகுதியிலே வர்ணப் பொருள்கள் கிடைப்பதாக பூமி சாஸ்திர நிபுணர்கள் அறிக்கையை சர்க்காருக்குக் கொடுத்திருப்பதைப்பற்றி மந்திரி ஏதாவது அறிவிப்பாரா ? அதைப் பரிசீலனை செய்து சுரங்கச் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்வதற்கு ஏதாவது முயற்சி செய்ய அரசாங்கம் முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : அந்தப் பகுதியிலே "லைம் ஸ்டோன்" இருப்பதாகத் தெரியவருகிறது. ஸிமெண்ட் பாக்டரியை ராமநாதபுரம் ஜில்லாவில் . . .

The Hon. Sri C. SUBRAMANIAM : அவர் சிவகங்கையைப் பற்றிக் கேட்கிறார்.

The Hon. Sri R. VENKATARAMAN : சிவகங்கையில் இல்லை. ராமநாதபுரத்தில் வைப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

Sri M. KALYANASUNDARAM : ஜிப்ஸம், மாக்னசைட் இவைகளுக்கு ஆழமான சுரங்கம் தேவையில்லை. இவைகள் பூமிக்கு மேலேயே இருக்கும். சுரங்கமாகத் தோண்டாமல், படிப்படியாக பெஞ்ச் வைத்து எடுக்கவேண்டும். குடையக் கூடாது. மாக்னசைட், ஜிப்ஸம் இருக்கக்கூடிய இந்தப் பிரதேசங்களில், அவர்களுடைய பேராசை காரணமாக குழி குழியாகத் தோண்டிக்கொண்டே போகிறார்கள். இதனால் பின்னால் நஷ்டம் ஏற்படும். இவைகளையெல்லாம் தனித்தனியாக சர்க்காருக்கு எழுதுவதென்றால் ஒரு செக்ரெடரி போதாது, நாலு செக்ரெடரிகள் வேண்டும். மைனிங் ரூல்ஸ் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இப்போது சொல்லுகின்ற இந்தப் புகாரை வைத்துக்கொண்டு இவைகளை அரசாங்கம் கவனிக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நண்பர் இப்போது புகார் கொடுத்திருக்கிறார். சர்க்கார் தக்க அதிகாரிகளை வைத்து இதை விசாரணை செய்யும்.

Mr. SPEAKER : Questions are over.